# 26

# பவுலின் நான்காண்டு சிறைவாசம், கி.பி. 58–63

*அப். 21:27-28:31*

## I. எருசலேமில் அவரது சிறைவாசம்.
## *(அப். 21:27-23:30.)*

அடுத்து வந்த இரு ஆண்டுகளில் எருசலேமிலும் செசரியாவிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை பவுலின் உரைகளின் வரிசையில் வகைப் படுத்துவது மிகச் சிறப்புடையதாயிருக்கும்.

***1. கூட்டத்திற்கு அவரது உரை.***—கூட்டமானது பவுலின்மீது விரைவான தாக்குதலைத் தொடுத்திருக்கும்; ஆனால், அவரை அவர்கள் தேவாலயத் திலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு வந்த பொழுது, போர் வீரர்கள் பலருடன் வந்த சேனாதிபதி அவரை மீட்டார். கூட்டத்தாரிடம் பேசுவதற்கு அனுமதி பெற்றுக் கொண்ட பவுல் அவர்களின் சொந்த மொழியில் உரையாற்றினார். படிக்கட்டுகளின்மீது நின்றபடி உரைக்கப் பட்ட இந்தப் பேச்சானது பவுலின் மனமாற்றம் பற்றிய விவரமான இரண்டாவது எடுத்துரைப்பு ஆகும் (இ.வ. அப். 9:1-18). யூதர்களுடன் பேசுவதில் இயல்பாய் உள்ளது போன்று, அவர் தம் எபிரெய இரத்தம், கல்வி, கிறிஸ்தவர்களுக்கு எதிரான தமது முந்திய வைராக்கியம், அவர் சீஷராகவும் இயேசுவின் அப்போஸ்தலராகவும் ஆன வழிமுறை ஆகியவை பற்றி வலியுறுத்தினார். அவர் புறஜாதியாருக்கான தமது ஊழியத்தைப் பற்றிக் குறிப்பிடும் வரையில் அவர்கள் அவரைக் கவனித்துக் கேட்டார்கள், அப்பொழுது சேனாதிபதி பவுலை கோட்டைக்குள் கொண்டு செல்லும்படி செய்வித்தார். இங்கு பவுல் தமது ரோமக் குடியுரிமையை எடுத்துக் கூறி அடிபடுவதிலிருந்து தம்மைக் காத்துக் கொண்டார்.

***2. ஆலோசனை சங்கத்தின் முன்பாக அவரது உரை.***—அடுத்த நாளில் சேனாதிபதி, பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அறிவதற்காக அவரை யூத ஆலோசனைச் சங்கத்தின் முன்பாகக் கொண்டு வந்தார். பவுல் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக உரையாற்றுதலை மேற்கொண்டார்; ஆனால் அவரை (வாயில்) அடிக்கும்படி பிரதான ஆசாரியரிடமிருந்து வந்த கட்டளையானது அவர் நியாயமான முறையில் (அங்கு) கேட்கப்படலாம் என்பதற்குச் சிறிதளவே நம்பிக்கை உள்ளதென்று அவர் விரைவில் நம்பும் படி செய்தது. சதுசேயருக்கு மிகவும் வெறுப்புள்ளதாயிருந்த பரிசேயரின்

போதனையான உயிர்த்தெழுதல் என்பது பற்றி (கூற) தமக்குள் திட்டமிட்ட அவர் பரிசேயர்கள் என்ற தமது சொந்த (மார்க்க) குழுவிலிருந்து ஓரளவுக்கு ஆதரவைப் பெற்றார். ஆலோசனைச் சங்கத்தார் உடனடியாக ஒரு உக்கிரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பவுல் அவர்களால் பீறுண்டு போவதிலிருந்து அவரைக் காப்பாற்றுவதற்காக, சேனாதிபதி அவரை மீண்டும் கோட்டைக்குள் அடைத்து வைத்தார். அடுத்த நாளில், அவரைக் கொல்வதற்கான துணிச்சல்மிக்க சூழ்ச்சியொன்று பவுலின் சகோதரியின் மகன் மூலமாக வெளிப்படுத்தப்பட்டது, உடனே சேனாதிபதி பவுலை இராணுவப் பாதுகாப்புடன் இரவு வேளையிலேயே செசரியாவுக்கு அனுப்பி விட்டார்.

## II. செசரியாவில் அவரின் சிறைவாசம். *(அப். 23:31-26:32.)*

***1. பேலிக்ஸ் முன்பாக அவரது தற்காப்பு வாதம்.***—பவுலின் விரோதிகள் முன் செல்ல மறுத்தவர்களாய் இராதிருந்தார்கள். ஐந்து நாட்களுக்குப் பிறகு பிரதான ஆசாரியர், புகழ்மிக்க வழக்கறிஞராயிருந்த தெர்த்துல்லு என்பவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு ஆளுநரிடமிருந்து பவுலுக்குத் தண்டனையை பெற்றுத் தர செசரியாவுக்குச் சென்றார். தெர்த்துல்லு பேலிக்ஸைப் போலியாய்ப் புகழுதல் மற்றும் பவுலைத் தவறாய்க் குறிப்பிடுதல் ஆகியவற்றுடன் வழக்குரைத்தலைத் தொடங்கினார். மிகவும் கௌரவத்துடன் பவுல் குற்றச்சாட்டுகளெல்லாவற்றையும் உதறித் தள்ளினார், ஆனால் உயிர்த்தெழுதலை விசுவாசிப்பதை ஒப்புக் கொண்டார். பவுலின் குற்றமின்மையைப் பேலிக்ஸ் நம்பினார் என்பது தெளிவு, ஆனால் யூதர்களின் மனதைப் புண்படுத்த விரும்பாத அவர் வழக்கை ஒத்தி வைத்தார்.

***2. பேலிக்ஸ்ஸுக்கு முன்பாக அவரது பிரசங்கங்கள்.***—பேலிக்ஸ், எமெஸாவின் அரசாயிருந்த அசிசுஸ் என்பவரின் மனைவியாய் இருந்த துருசில்லாள் என்பவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். இவள் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகளாக, உண்மையான ஏரோது வம்சத்தவளாக இருந்தாள். அவளது ஆர்வத்தை நிறைவு செய்வதற்காக, பேலிக்ஸ் பவுலைத் தங்கள் முன்பு பிரசங்கிக்கும்படி உத்தரவிட்டார். பவுல், தமது சொந்த வாழ்வு இடர்ப்பாட்டில் இருந்த அந்த வேளையிலும் கூட, பேலிக்ஸின் மனச் சான்றினை நோக்கித் தாக்குதல் விடுத்து குற்ற உணர்வுள்ள நிலையில் இருந்த அந்தத் தம்பதிகளுக்கு முன்பாக இச்சையடக்கத்தைப் பற்றியும், நீதியைப் பற்றியும், இனி வரப் போகின்ற நியாயத்தீர்ப்பு பற்றியும் விளக்கியுரைத்தார், அதனால் பேலிக்ஸ் தமது கைதியின் முன்பாகப் பயந்து நடுங்கினார். ஆனால் அவரை (மீண்டும்) சிறையில் அடைத்த பேலிக்ஸ் பலமுறை அவரை அழைத்துப் பேசினார்; ஆனால் அது சுவிசேஷத்தைக் கேட்பதற்காக அல்ல, பவுலின் விடுதலைக்காக அவரிடமிருந்து இலஞ்சம் பெறுவதற்காகவே அவ்வாறு அழைத்துப் பேசினார்.

***3. பெஸ்துவுக்கு முன்பாக அவரது தற்காப்பு வாதம்.***—இரு ஆண்டு

களுக்குப் பிறகு, பேலிக்ஸ் தமது தவறான நடவடிக்கைகள் குறித்து ரோமா புரிக்கு வந்து பதில் கொடுக்கும்படி உத்தரவைப் பெற்ற போது, பவுலை ஒரு கைதியாகவே விட்டுச் சென்றார். அவருக்குப் பின் பெஸ்து ஆளுநரா னார். பவுலின் வழக்கைப் புதுப்பித்த யூதர்கள், அவரை எருசலேமுக்குக் கொண்டு வரும்படி ஆரவாரம் இட்டார்கள். பவுல் அவர்களின் குற்றச் சாட்டுகளை மறுத்தார்; மற்றும் எருசலேமுக்குச் செல்லும்படி பெஸ்து முன் மொழிந்ததையும் மறுத்தார், அங்கு செல்வதென்பது சிங்கத்தின் வாயில் அகப்பட்டது போலாகும் என்பதை நன்கறிந்த பவுல் *"நான் இராயருக்கு அபயமிடுகிறேன்"*[1] என்று பதில் அளித்தார். பெஸ்து, "நீ இராயரிடத்திற்கே போகக் கடவாய்"[2] என்று பதில் அளித்தார்.

இரு ஆண்டுகளுக்கு முன்பாகக் கொரிந்துவில் இருக்கையில் பவுல், இன்னும் பரவலான சுவிசேஷ ஊழியத்திற்கான நோக்கம் ஒன்றை வடிவமைத்திருந்தார். ரோமாபுரிக்கும், பிறகு ஸ்பானியா நாட்டிற்கும் செல்வது அவரது திட்டமாய் இருந்தது (ரோமர் 15:23, 24). மீண்டும் ஒருமுறை மனிதர்களின் கொடும் செயலானது தேவனுடைய தீர்மானங் களுடன் ஒத்துழைக்கின்றது. பவுல் தாம் எதிர்பார்த்த வகையில் இல்லா விட்டாலும், ரோமாபுரிக்குச் செல்ல வேண்டியதாகின்றது.

***4. அகிரிப்பாவுக்கு முன்பாக அவரது உரை.***—பவுலின் வழக்கானது பெஸ்துவைக் கலக்கமடையச் செய்தது. அவரை (பவுலை) இராயரிடத்தில் அனுப்ப வேண்டியதாயிருந்தது, ஆனால் ஆளுநர் இன்னும் தம் கைதிக்கு எதிராகக் குறிப்பிட்டத்தக்க திட்டவட்டமான குற்றச்சாட்டு எதையும் கொண்டிராதிருந்தார். அவர் (பெஸ்து) நன்கு அறிந்திராத யூதப் பழக்க வழக்கங்கள் பற்றியே யூதர்களின் முறையீடு எடுத்துரைத்தது. இவ்வேளை யில் புதிய ஆளுநரைப் பாராட்டுவதற்காக இரண்டாம் ஏரோது அகிரிப்பா செசரியாவுக்கு வந்து சேர்ந்தார். அகிரிப்பா தமது சொந்த சகோதரியான பெர்னிக்கேயாளுடன் வாழ்ந்து கொண்டிருந்தார், அவள் தனது சகோதரி யான துருசில்லாளைப் போன்றே அழகும், மதிநுட்பமும் மற்றும் தீயொழுக் கமும் உடையவளாய் இருந்தாள். அகிரிப்பா ஒரு யூதர் என்ற வகையில் இந்த வழக்கின்மீது ஆர்வம் கொண்டு அதை வெளிப்படுத்தினார், மற்றும் அவர்கள் முன்பாக உரையாற்றும்படி பவுல் அழைக்கப்பட்டார். இதற்கு முன் அவர் (பவுல்) இது போன்றதொரு கூட்டத்திற்கு முன்பாக ஒருக்காலும் உரையாற்றியதில்லை: ஒரு ரோம ஆளுநர்; ஏரோதியர்களின் இரண்டு விரியன்களான அகிரிப்பாவும் அவரது சகோதரி-மனைவியுமான பெர்னிக்கேயாள்; இவர்களுடன் ரோமத் தலைமையகத்தின் முதன்மைப் படை மற்றும் குடிமை அதிகாரிகள் ஆகியோர் ஒன்றுகூடியிருந்தனர். பவுல் தாம் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியது, தமது மனமாற்றத்துடன் தொடர்புடைய உண்மைகள் ஆகியவற்றை மீண்டும் எடுத்துரைக்கின்றார். அவர் அகிரிப்பா என்ற யூதர் மீது குறிவைக்கின்றார். சுவிசேஷம் தேவனிட மிருந்து வந்துள்ளது மற்றும் அது யூதர்களின் வேத வசனங்களை நிறை வேற்றுகின்றது என்று காண்பித்தலே அவரது மைய நோக்கமாக உள்ளது. புறதெய்வ வழிபாட்டாளரான பெஸ்து, பவுலின் உற்சாகமானது அவரது பைத்தியத் தன்மையால் உண்டானதென்று அறிவித்தலுடன் பவுலின்

உரையை இடைமறிக்கின்றார். நயப்பாங்குள்ள அகிரிப்பாவோ கிறிஸ்த வராகுதல் பற்றிய முரண்பாடான/எதிரிடைப் பொருள் கொண்ட குறிப் பொன்றைக் கூறுகின்றார். நற்பண்புடைய பவுல் எழில்மிக்கதொரு விருப்பத்துடன் (தமது உரையை) முடிக்கின்றார்; கிரீடங்களும், ஆடம்பர உடைகளும், ஆர்ப்பாட்டங்களும் அவருக்குச் சிறியவையாய் இருந்தன; அகிரிப்பாவாயிருப்பினும், அங்கிருந்த வேறு எவராயிருப்பினும் அனை வருமே அவரைப் போன்றே இருந்தனர்; பிறகு அவர் விலங்கிடப்பட்ட தம் கைகளைப் பார்த்து, "இந்தக் கட்டுகள் தவிர"[3] என்று கூடுதலாய்க் கூறுகின் றார். உலகப் பிரகாரமான இந்த உணர்வற்ற மனிதர்கள் சுவிசேஷத்தின் வல்லமையை எதிர்த்திருக்கக் கூடும், ஆனால் பவுலின் வீரார்ந்த குற்றமற்ற தன்மைக்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாமல் அவருக்கு மரியாதையளிக்க மட்டுமே அவர்களால் முடிந்தது. "இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடா திருந்தானானால், இவனை விடுதலை பண்ணலாகும்"[4] என்பதே அவர்களின் தீர்மானமாய் இருந்தது.

## III. ரோமாபுரிக்குக் கடற்பயணம்.
## *(அப். 27:1-28:15.)*

***1. கப்பலும் (பயணக்) குழுவும்.***—கி.பி. 60ன் பின் கோடை காலத்தில் பவுல் செசரியாவிலிருந்து அதிரமித்தியம் செல்லும் கப்பல் ஒன்றில் புறப்பட்டார். சோதித்தறியப்பட்ட இரு நண்பர்கள் அவருடன் துணையாக வந்தனர். அவர் இரு ஆண்டுகளுக்கு முன்பு பிலிப்பியை விட்டுப் புறப்பட்ட திலிருந்து லூக்கா அவருடன் தங்கியிருந்தவராகவோ அல்லது அவருக்கு அண்மையில் இருந்தவராகவோ காணப்படுகின்றார். அவர் (லூக்கா) தம் சுவிசேஷத்தை அநேகமாகப் பவுல் செசரியாவில் சிறை வைக்கப்பட்டிருந்த போது எழுதியிருந்தார். பவுலுடன் அரிஸ்தர்க்குவும் ஒரு சக கைதியாக இருந்தார் (இ.வ. அப். 19:29; 20:4; 27:2; கொலோ. 4:10), இருப்பினும் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம் பற்றி ஒன்றும் கூறப்படுவதில்லை. அந்தக் குழுவில் பிற கைதிகளும் இருந்தனர், இவர்கள் யாவரும் யூலியு என்ற நூற்றுக்கதிபதியின் பொறுப்பில் இருந்தனர்.

***2. மீறாவுக்கு ஓட்டம்.***—பெனிக்கியக் கடற்கரையோரமாய் ஓடிய கப்பல் சீதோன் துறையைத் தொட்டது, அங்கு பவுல் கரைக்குச் சென்று தனது நண்பர்களிடத்தில் உபசரிப்புப் பெற்றுப் புத்துணர்வடையும்படி நூற்றுக்கதிபதி இரக்கத்துடன் அனுமதித்தார். சீதோனிலிருந்து அதிரமித்தியத்திற்கான நேர்ப்பயணமானது சீப்புருத் தீவை வலது புறத்தில் ஒதுக்கி விட்டிருக்கும்; ஆனால் சாதகமற்ற காற்றுகளுக்குப் பயந்து அவர்கள் சீப்புருத் தீவுக்கும் பிரதான நிலத்திற்கும் இடையில் பயணம் செய்தனர். ஆசியா மைனரின் தென் மேற்குக் கரையில் இருந்த மீறாவில் அவர்கள் ரோமாபுரிக்குச் சென்று கொண்டிருந்த அலெக்சந்திரிய தானியக் கப்பலைக் கண்டு, பேரரசின் நகரத்திற்குச் செல்ல அவர்கள் கப்பல் மாறினர்.

***3. மாபெரும் புயல்.***—கினீது தீவு வரையிலும் காற்று முகமாய் அவர்கள் கரையோரமாய்த் தொடர்ந்து மெதுவாய்ப் பயணிக்கையில், அவர்கள்

கிரேத்தாத் தீவின் உள்தங்குமிடம் ஒன்றைப் பெறுவதற்கு தெற்கு நோக்கி எச்சரிக்கையற்றுத் திரும்பினர். தெற்குக் கரையில் ஏறக்குறைய பாதி வழியில், அவர்கள் நல்ல துறைமுகம் என்ற துறைமுகத்திற்குப் பயணித்தனர். காலம் பிந்தினதினிமித்தம் பவுல் கடற்பயணத்தைத் தள்ளி வைக்கும்படி அறிவுரை கூறினார்; ஆனால் கப்பல் முதலாளியின் முடிவைப் பின்பற்றி, அவர்கள் பயணித்தனர், ஆனால் ஒரு தீவிரமான வட கிழக்குப் புயலினால் பிடிக்கப்பட்டு, அது அவர்களைத் தன் முன்னால் பதினான்கு நாட்களாக உதவியற்ற வகையில் துரத்தியது. பவுலைத் தவிர எல்லாரும் நம்பிக்கையை இழந்து போனார்கள். தேவனிடமிருந்து வந்த இராத் தரிசனம் ஒன்று கப்பற் சேதம் ஏற்படும் என்றும் அந்தக் குழுவினர் முழுவதும் காப்பாற்றப் படுவார்கள் என்றும் உறுதிப்படுத்தியது. எனவே கப்பல் மெலித்தா (மால்ட்டா) தீவுக்குக் கடந்து வந்தது. சரிவு மணற் கரையில் ஓட்டப்பட்டு, இருநூற்று எழுபத்து ஆறு ஆத்துமாக்களும் நீந்தியோ அல்லது கப்பல் சேதத்தில் உடைந்து மிதந்த மரக்கட்டைகளைப் பிடித்துக் கொண்டோ கரையேறினார்கள்.

***4. மெலித்தாவில் மாரிக்காலம்.***—அந்தத் தீவார் வழக்கத்திற்கு மாறான வகையில் இரக்கம் காண்பித்து, குளிராயிருந்த கடற்பயணிக்களுக்காக நெருப்பு மூட்டினர். ஒரு கைதியாயிருந்தும் குறிப்பிடத் தக்கவராயிருந்த பவுல் கப்பலில் செல்வாக்குடையவராய் இருந்தது போன்று நிலப்பகுதியி லும் தம்மைப் பயனுடையவராக்கிக் கொண்டார். அவர் நெருப்பிற்காக விறகு சேகரித்தவர்களுக்கு மேலானவராய் இருக்கவில்லை; அவர் அந்தத் தீவின் அதிபதியான புபிலியுவின் தந்தையையும், தம்மிடத்தில் கொண்டு வரப்பட்ட பலரையும் குணமாக்கினார். பவுலுடன் இருந்த பயணக் குழுவினர் வசந்த காலத்தில் புறப்பட்டுச் சென்ற பொழுது தீவைச் சேர்ந்தவர்கள் பயனுள்ள பொருட்கள் ஏராளமானவற்றை (கப்பலில்) ஏற்றும் அளவுக்கு அவரது ஊழியங்கள் அப்படிப்பட்ட மேன்மையுடைய வைகளாய் இருந்தன.

***5. கடல் பயணத்தின் முடிவு.***—குளிர் காலத்தில் அங்கு தங்கியிருந்த இன்னொரு அலெக்சந்திரியத் தானியக் கப்பலில் ஏறிய அவர்கள் சீரக்கூசா மற்றும் ரேகியும் நகரங்களைத் தொட்டு கடைசியில் நேப்பிள்ஸ் கரையில் இருந்த புத்தெயோலியில் நங்கூரமிட்டு நின்றது. புத்தெயோலி என்பது அலெக்சந்திரிய வர்த்தகக் கப்பல்களுக்கு மேற்கில் இருந்த திருப்பு/ தங்குமுனைகளில் ஒன்றாயிருந்தது, இன்னொன்று தைபர் நதியின் முகத்துவாரத்தில் இருந்த ஒஸ்ட்டியா ஆகும். இங்கு (புத்தெயோலியில்) பவுல் சீஷர்களைக் கண்டார், இங்கிருந்து அவர் “சாலைகளின் இளவரசி” எனப்பட்ட சாலை வழியே அப்பியுபுரம் சென்று, பின் அங்கிருந்து ரோமாபுரிக்குச் சென்றார். ரோமாபுரியில் இருந்த சகோதரர்கள் அவரது வருகையைப் பற்றித் துரிதமாய்க் கேள்விப்பட்டு, அவரைச் சந்திப்பதற்காக அப்பியுபுரம் மற்றும் மூன்று சத்திரம் ஆகிய ஊர்கள் வரைக்கும் வந்தார்கள். பவுல் ஒரு கைதியாக இருந்த போதிலும் வெற்றி ஊர்வலமாக ரோமாபுரிக்குள் நுழைந்தார்.

## IV. ரோமாபுரியில் இரு ஆண்டுகள் சிறைவாசம். *(அப். 28:16-31.)*

***1. யூதர்களுடன் பவுலின் பேட்டி.***—பவுல் புறஜாதியாருக்கான அப்போஸ்தலராயிருப்பதற்காக அழைக்கப்பட்டார். இருப்பினும் (எவ்விடத்திலும்) அவரது செய்தியானது எந்த மாறுபாடுமின்றி முதலாவது யூதர்களாயிருந்த சகோதரர்களுக்கானதாகவே இருந்தது. ஆகையால் அவர் உடனடியாக அந்நகரின் ஆயிரக்கணக்கான யூதர்களுக்குத் தலைவர்களாய் இருந்தவர்களை அழைத்தனுப்பினார். இரண்டாவது கூட்டமொன்றில் அவர் காலை முதல் இரவு வரையில் தேவனுடைய இராஜ்ஜியத்துக்கடுத்த வைகளை அவர்களுக்கு முன்பாக வைத்தார். எங்கும் போலவே இங்கும் இதன் விளைவாகச் சிலர் விசுவாசித்தனர், ஆனால் பெரும்பான்மை யானோர் கிறிஸ்துவைப் புறக்கணித்தனர்; மற்றும் எங்கும் போலவே இங்கும் பவுல் புறஜாதியாரிடம் திரும்பினார்.

***2. ரோமாபுரியிலிருந்து பவுலின் நிருபங்கள்.***—இந்த முதல் ரோமச் சிறையிருப்பின் போது, பவுல் குறைந்தது பின்வரும் நான்கு நிருபங்களை எழுதினார்:

*அ. எபேசியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன்.*—இதற்கான ஆதாரம் பின்வருமாறு: (1) எபேசியர் மற்றும் கொலோசெயர் நிருபங்கள் தீகிக்குவினால் எடுத்துச் செல்லப்பட்டன (எபே. 6:21, 22; கொலோ. 4:7, 8). (2) பிலேமோன் நிருபம் ஒநேசிமுவால் எடுத்துச் செல்லப்பட்டது (பிலே. 10-12). (3) இருவரும் ஒன்றாய்ப் பயணம் செய்தனர் (கொலோ. 4:7-9). (4) பவுல் ஒரு கைதியாய் இருந்தார் (எபே. 3:1). (5) அவர் செசரியா மற்றும் ரோமாபுரி ஆகிய இடங்களில் மாத்திரமே நீண்ட நாள் சிறையில் இருந்தார். பின்பு அவர் ரோமாபுரிக்குச் சென்றார்; இப்பொழுது அவர் விடுதலை யாக்கப்பட்டு பிலேமோனைச் சந்திக்கலாம் என்று நம்பிக்கையாய் இருந்தார் (பிலே. 22).

*ஆ. பிலிப்பியர்.*—அரண்மனையாட்களைப் பற்றி அவர் மறைமுக மாய்க் குறிப்பிடுதல் என்பது இதை அவர் ரோமாபுரியில் இருந்து எழுதி யிருந்தார் என்று காண்பிக்கின்றது (1:13).

*இ. எபிரெயருக்கு எழுதிய நிருபம்.*—எபிரெயருக்கு நிருபத்தை எழுதியது யார் என்பது ஐயத்துக்குரியதாக உள்ளது. இது பவுலினால் எழுதப்பட்டிருந்தால், இது அநேகமாக இந்தக் காலகட்டத்தில்தான் எழுதப்பட்டிருக்கும்.

***3. ரோமாபுரியில் பவுலின் சுவிசேஷ ஊழியங்கள்.***—ரோமாபுரியில் பவுல் அடைக்கப்பட்ட கட்டுப்பாட்டில் காக்கப்பட்டிருந்ததில்லை. அவர் தமக்கு வாடகைக்கு அமர்த்திக் கொண்ட வீட்டில் குடியிருந்து கொண்டு அங்கு வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டார். இருப்பினும் இரவும் பகலும் அவர் ஒரு படை வீரனுடன் விலங்கிடப்பட்டிருந்தார். ஆனால் விலங்குகள் அவரின் ஆத்துமாக்களுக்காகத் தாகங் கொண்ட கிறிஸ்துவைப் போன்று அக்கறையுணர்வைத் தணித்து விடவில்லை. இந்தக் காலகட்டத்தில் எழுதப்பட்ட நிருபங்கள் கனிமிக்க உழைப்புகளை மறைமுகமாய்

உணர்த்துபவைகளாய் உள்ளன. சுவிசேஷம் இன்னும் பரவுவதற்கேதுவாக அவர் கட்டுகள் விழுந்தன (பிலி. 1:12); இராயனின் வீட்டாரிலும் (பிலி. 4:22) புகழ் பெற்ற அரண்மனையாட்களில் இருந்த படைவீரர்களில் இருந்தும் கூட (பிலி. 1:13) மனமாற்றப்பட்டார்கள் ஆதாயப்படுத்தப்பட்டனர், அவர்களில் பெரிய எண்ணிக்கை கொண்டவர்கள் அந்தக் கைதியிடம் விலங்கிடப்பட்டிருந்தனர். மேலும் அவரைச் சுற்றிலும் ஒப்புக்கொடுத்த உணர்வுடன் கூடியவர்களும் அவருடைய மனதிற்கிசைந்த ஊழியர்களுமாய் இருந்தவர்களின் குழு ஒன்று இருந்தது, அவர்கள் மூலமாக அவர் பன்மடங்கு பெருகினார். அவர்களில் *தீமோத்தேயு, லூக்கா, அரிஸ்தர்க்கு, எப்பாப்பிரா* மற்றும் தொடக்க காலத்தில் "ஊழியத்திற்கு வராது போன"[5] *மாற்குவும்* கூட இருந்தனர். இங்கு லூக்கா எழுதிய வரலாறு திடீரென இடைமுறிகிறது, அது பவுலை உலகின் மாபெரும் தலைநகரில் சுவிசேஷத்திற்கு விரிவான, உறுதியான அஸ்திபாரம் இட்டு நிலைநாட்டுபவராக விட்டுச் செல்லுகிறது, அங்கிருந்து அது (சுவிசேஷம்) பேரரசின் தொலை தூரப்பகுதிகளுக்குக் கதிர் வீச முடியும்.

---

குறிப்புகள்

[1]*அப். 25:11.* [2]*அப். 25:12.* [3]*அப். 26:29.* [4]*அப். 26:32.* [5]*அப். 15:38.*